# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் — வணிக மாத இதழ்

Volume: 13 | Issue : 11 | FEBRUARY 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



பிப்ரவரி 28 தாய்லாந்து

மார்ச் 10 சிங்கப்பூர் மலேஷியா

மார்ச் 18 அந்தமான்

மார்ச் 25 வியட்நாம் கம்போடியா

ஏப்ரல் 25 ஹாங்காங்

ஏப்ரல் 5 காஷ்மீர்

ஏப்ரல் 15 துபாய்

மே 17 சிம்லா மணாலி

மே 23 ஐரோப்

மே 23 சிங்கப்பூர் மலேஷியா

BOOK NOW 99 43 03 1237

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்



82/235, காமராஜர் சாலை, மதுரை




Sourashtra Delegation (11numbers) let by Sri. **Nageswaran Somi** met Hon'ble Governor of Tamilnadu Sri. **R.N. Ravi** on 11.02.2025 at Raj Bhavan, Chennai.

*Photo from Left to Right:* Mr. **P.S.R. Janardanan Bapu**, Vice President, Geetha Bhavanam, Mr. **K.K. Dinesh**, President, Sourashtra Chamber of Commerce, Mr. **J. Balasubramanian**, President, Bombay Sourashtra Association, Mr. **K.V. Bala**, Senior President, Sourashtra Chamber of Commerce, Mr. **Nageswaran Somi**, Ex. MD., ITCOT& Coordinator CSLC & Project Vaani Initiatives, Hon'ble Governor of Tamilnadu Sri. **R.N. Ravi,** Dr. **V.R. Rajendran**, President, Sourashtra Madhya Sabha, Dr. **M.D. Poornachari**, Govt. of India Public Prosecutor, Madras High Court, Madurai. Mr. **J.R. Ramesh**, President, Chennai Sourashtra Sabha, Mr. **K.K. Devadoss**, Treasurer, Karnataka United Sourashtra Organisation (KUSO), Mr. **V.G. Gopalakrishnan**, President, KUSO, Mr. **R.K. Sridharan**, Vice President, KUSO

செய்தி - தலைவர் உரையில்




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

**மெட்ரோ ஷூ மார்ட்**

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

**Sri Balameenakshi Aqua Pumps**

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349




KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985

# Karpagam

## Auto Group of Companies

**Dealers in Automobile Spare Parts**

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

அல்கிதெங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

சேம்பர் துவக்க தினமான ஜனவரி 26ம் நாளை, ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 18ம் ஆண்டு நிறைவு விழாவாக வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில், முன்னாள் தலைவர்களை ஸௌராஷ்டர சேம்பர் நிர்வாகம் தகுந்த வகையில் கௌரவித்தது. அங்கத்தினர்கள் திரளாக கலந்து கொண்டது மகிழ்ச்சியை அளிக்கிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் சிறப்பாக கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளித்தது.

கடந்த பிப்ரவரி மாதம் 1ம் தேதி மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்கள் மத்திய பட்ஜெட் 2025-ஐ தாக்கல் செய்தார். அதில், நடுத்தர வர்க்கத்திற்கு மிகவும் பயனளிக்கும் வகையில், வரி உச்சவரம்பை 12 லட்சமாக உயர்த்தியது பாரத தேச மக்கள் அனைவருக்கும் சற்றும் எதிர்பாராத இன்ப அதிர்ச்சி அளித்தது.

தொழில்துறையைப் பொருத்த வரையில், ஸ்டார்ட்அப் மற்றும் பழங்குடியின பெண்கள் தொழில் துவங்க நிதி ஒதுக்கீடுகள் மற்றும் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதோடு, புதிதாக ஜிஎஸ்டி பெறுவதற்கு நவீன நடைமுறையையும், உதயம் சான்றிதழ் பெற்றவர்களுக்கு கடன் அட்டையும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, நாட்டின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் உயிர் காக்கும் மருத்துவம் போன்றவைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள், சலுகைகள் மற்றும் விலக்குகள் அளித்திருப்பது வரவேற்கத்தக்கது.

சிறுபான்மை மொழி (Linguistic Mintority) இனமாக கருதப்படும் நமது ஸௌராஷ்ட்ர சமூகத்திற்கு என ஒரு கலாச்சார மையத்தை மதுரையில் நிறுவ வேண்டும் என்பது பலநாள் கனவாக உள்ளது. இந்த நிலையில், மத்திய கல்வித்துறை அமைச்சகம், சிறுபான்மை மொழி மேம்பாட்டிற்காக கொண்டு வந்துள்ள திட்டத்தின் கீழ், மேற்கூறிய நமது கோரிக்கையை வலியுறுத்தி நமது சமூக அமைப்புகள் பல இட்காட் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. சோமி. நாகேஸ்வரன் அவர்களின் தலைமையில் ஒன்றிணைந்து மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரசாத் அவர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தது. இதனை பரிந்துரை செய்யக்கோரி, தமிழ்நாடு ஆளுநர் மேதகு **ஆர்.என். ரவி** அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் பிற சமூக அமைப்புகள் இணைந்து 11.02.2025 அன்று நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர். இந்த முயற்சி வெற்றியடைந்தால் நம் சமூகத்திற்கு சரித்திர நிகழ்வாக அமையும்.

அங்கத்தினர்கள் அனைவருக்கும் மஹா சிவராத்திரி நல்வாழ்த்துக்கள்

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

| Advisors | Contact |
|---|---|
| K.K. Surendranath | 98409 88810 |
| T.K.D. Mohan | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**14.01.2025** – அன்று மாலை 6 மணிக்கு ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் 155வது ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக அவ்ராம் அமி டிரஸ்ட் தலைவர் திரு. கன்னிவாடி கே. தேவராஜ் அவர்கள் கலந்து கொண்டார். முக்கியமாக, ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் குடும்ப வாரிசுகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**26.01.2025** – பாரத தேசத்தின் 75வது குடியரசு தின நிறைவு விழாவை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கொண்டாடியது. சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் காலை 8.30 மணிக்கு கொடியேற்றினார். சிறப்பு விருந்தினராக, தெப்பக்குளம் காவல் நிலைய ஆய்வாளர் திரு. ஏ.என்.ஆர். ஸ்ரீதரன் அவர்கள் கலந்து கொண்டார்.

**26.01.2025** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 18ம் ஆண்டு விழா மற்றும் துவக்க தின விழா மாலை 6 மணிக்கு ஸ்ரீ காமாட்சி அரங்கில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக, Tamilnadu Drugs Control & State Licensing Authority, Director, ஸ்ரீ. M.N. ஸ்ரீதர் அவர்களும் மற்றும் கௌரவ விருந்தினராக Ln. ஸ்ரீ. S.S.K. அருள்ஜோதி M/s. S.S. Krishnamoorthy Firm & President, Nagal Nagar Sou. Sabha, Dgl. ஆகியோர் கலந்து கொண்டனர். வாழ்த்துரை வழங்க Palani, Tamilnadu Special Police XIV Battalion, Sub-Inspector(Tech.,) ஸ்ரீ. O.B. வைகுந்த் அவர்கள் கலந்து கொண்டார்.

**21.01.2025** – ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக முன்னாள் தலைவர் திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் நாகாலாந்து ஆளுநர் திரு. இல. கணேசன் அவர்களை நேரில் சந்துத்து தொழில் வாய்ப்பு குறித்து மனு அளித்தார்.

**30.01.2025** – மதுரையில், வரி செலுத்துவோருக்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டத்தில், சேம்பர் சார்பாக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**06.02.2025** – பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டமாக மத்திய பட்ஜெட் 2025 குறித்து நடத்தப்பட்டது. மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக, BSL and Associates, LLP பட்டயணக்கணக்காளர்கள் திரு. J. பாலசுப்பிரமணியன் அவர்களும் திரு. G. சரவணக்குமார் அவர்களும் கலந்து கொண்டு பட்ஜெட் 2025 குறித்து விளக்கமளித்தனர்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

2025 புத்தாண்டு துவங்கி, ஜனவரி மாத முதல் லாப் ஸமாச்சார்–ஐ தமிழகத்தின் முன்னணி தங்க நகை விற்பனையாளரான தங்க மயில் ஜுவல்லரி நிறுவனர் திரு. **பா. ரமேஷ்** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. 2025ம் ஆண்டு இதழ் ஆரம்பமே பொன் நிறைந்த சூழலில் வெளியாகியுள்ளதை மகிழ்ச்சியாக கருதுகிறேன்.

மத்திய பட்ஜெட் வெளியாகி, நடுத்தர மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது அனைத்து தரப்பினரிடத்திலும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

மதுரையில் நமது ஸௌராஷ்ட்ர சமூகத்திற்கு என கலாச்சார மையத்தை நிறுவ, இட்காட்–ன் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. **சோமி. நாகேஸ்வரன்** அவர்களின் முழு முயற்சியில், அனைத்து ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. முயற்சி வெற்றிபெற லாப் ஸமாச்சார் இதழ் குழு வாழ்த்துகிறது.

ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல் கவுன்சில்–ன் தேர்தலில் போட்டியிடும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் தலைவர் திரு. **கே.கே. தினேஷ்** மற்றும் அவரது அணியினர் வெற்றிபெற லாப் ஸமாச்சர் இதழ் குழு வாழ்த்துகிறது.

## திருக்குறள்

**பொச்சப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து**
**எப்பால்நூ லோர்க்கும் துணிவு**

**பொருள்:** கடமைகளை மகிழ்ச்சியில் மறந்துவிடுபவர்களுக்குப் புகழால் வரக்கூடிய நன்மைகள் இல்லை. இது உலகத்தில் எந்த நாட்டிலும் அறிவாளிகள் அனைவரும் கண்ட உண்மை.

அதிகாரம் 54 | பொச்சாவாமை (கடமைகளை மறந்து விடாமை) | அரசியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544




*Best Compliments from*

**BVK GROUP**

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

BVK GROUP

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.




# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் 18ஆம் ஆண்டு விழா

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் 18ம் ஆண்டு விழா 26.01.2025 அன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீ காமாட்சி மகால்–ல் வெகு விமரிசையாக நடைபெற்றது.

சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, Tamilnadu Drugs Control & State Licensing Authority, Director, ஸ்ரீ. M.N. ஸ்ரீதர் அவர்களும் மற்றும் கௌரவ விருந்தினராக Ln. ஸ்ரீ. S.S.K. அருள்ஜோதி M/s. S.S. Krishnamoorthy Firm & President, Nagal Nagar Sou. Sabha, Dgl. ஆகியோர் கலந்து கொண்டனர். வாழ்த்துரை வழங்க Palani, Tamilnadu Special Police XIV Battalion, Sub-Inspector(Tech.,) ஸ்ரீ. O.B. வைகுந்த் அவர்கள் கலந்து கொண்டார்.

விழா துவங்குவதற்கு முன்னதாக, விஷ்வேஷ் நாட்டியாலயாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாணவிகளை சேம்பர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது.

விழாவின் துவக்கத்தில், சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சேம்பர் செயல்பாடுகள் குறித்து பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் பேசினார்.

இதனையடுத்து, விழா மேடையில். E.A. வெங்கட்ராமய்யர் தர்மம் சார்பாக பனிரெண்டாம் வகுப்பில் பள்ளியளவில் முதலாவதாக வந்த இரண்டு மாணர்வகளுக்கு நன்கொடை வழங்கப்பட்டது.

முன்னதாக, வாழ்த்துரை வழங்குவதற்கு வருகை தந்த திரு. O.B. வைகுந்த் அவர்களை சேம்பர் இணைச் செயலாளர் திரு. S.G. ஸ்ரீநிவாசன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். வாழ்த்துரையில் நமது சேம்பர் செயல்பாடுகளைப் பாராட்டிப் பேசினார். மேலும், டிஜிட்டல் விழிப்புணர்வு சம்பந்தமாக மிக அருமையான விளக்கத்தை அளித்தார்.

18ம் ஆண்டு விழாவின் முக்கிய நிகழ்வான **Charter Day** எனும் சேம்பர் துவக்க தினத்தை கொண்டாடும் வகையில், சேம்பர் முன்னாள் தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் முன்னாள் தலைவர்கள் அனைவரையும் விழா மேடையில் 2024–26 நிர்வாகக்குழு கௌரவித்தது. முன்னாள் தலைவர்கள் அனைவரும் சேம்பர் வளர்ச்சிக்கும், நடைபெறும் நிர்வாகத்திற்கும், இன்னும் முன்னோக்கிச் செல்வதற்கான வழிமுறைகளை தெரிவித்தனர்.

இந்த நிகழ்வினையடுத்து, கௌரவ விருந்தினர் திரு. S.S.K. அருள்ஜோதி அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. S.R. சுந்தர்நாத் அவர்கள் அறிமுகம் செய்தார். கௌரவ விருந்தினர் தமது உரையில், விரைவில், சேம்பர்–ன் நோக்கப்படி ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் திண்டுக்கல்–ல் சேப்டர் துவங்கப்படும் என்று தெரிவித்தார். மதுரையில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வெற்றிநடைபெற்று வருவது போல, திண்டுக்கல்லிலும் துவக்கப்படும், அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. M.N. ஸ்ரீதர் அவர்களை சேம்பர் சிறப்பு அழைப்பாளர் Dr. T.M. பிரசன்ன குமார் அவர்கள் அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினர் தமது உரையில், மருந்துகளை எவ்வாறு பொதுமக்களாகிய நாம் பெற வேண்டும் என்று பேசினார். முக்கியமாக, ஆன்லைன் மூலமாக மருந்துகளை வாங்குவதை தவிர்ப்பது நல்லது என்றார். அதோடு, எங்கோ இருக்கும் மருத்துவருடன் ஆன்லைன் மூலம் மருத்துவ ஆலோசனை பெறும்போது, அவர் கூறும் மருந்துகள் இங்கு கிடைக்காமல் போகும் மிகவும் வாய்ப்புள்ளது. ஆகவே, இது நடைமுறையில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதால், உள்ளூரில் உள்ள மருத்துவரின் ஆசோனைப்படி மருந்துகளை எடுக்கக் கேட்டுக்கொண்டார்.

மேலும், நம் சமூக மக்கள் யாரேனும் சொந்தமாக மருந்து கடை (மெடிக்கல் ஷாப்) வைக்க வேண்டும் என்றால், அதற்கான உரிமம் பெற தம்மை தொடர்புகொண்டால் வேண்டிய உதவியை செய்வதாக தெரிவித்தார்.

விழாவில் பங்கேற்ற விருந்தினர்கள் அனைவரையும் சேம்பர் முறையாக கௌரவித்தது.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் சேப்டர் துவக்கம் குறித்து சேம்பர் துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி அவர்கள் அடுத்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்து அறிவித்தார்.

நிறைவாக, சேம்பர் இணைச் செயலாளர் திரு. T.N. சூரிய பிரகாஷ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த விழாவில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. முதலில் வந்த 25 நபர்களுக்கும், தம்பதியர்களாக வந்த முதல் 10 நபர்களுக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த விழா சிறப்பாக நடைபெற பொருளுதவி செய்த தலைவர் திரு. K.K. தினேஷ், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, இணைச்செயலாளர்கள் திரு. S.G. ஸ்ரீநிவாசன், திரு. T.N. சூரிய பிரகாஷ், செயற்குழு உறுப்பினர் திரு. S.R. சுந்தர்நாத், சிறப்பு அழைப்பாளர் திரு. T.R. சரவணன் ஆகியோருக்கும், விளம்பர உதவி செய்த, BVK Group, EAV Group, வேல் மருத்துவமனை & குவாலிட்டி நிட் வியர்ஸ் பி.லிட்., ஆகியோருக்கும், களப்பணியாற்றிய செயற்குழு உறுப்பினர்கள் திரு. T.K. சிவநாத் பாபு, திரு. திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு, திரு. T.K. யாகேஸ்வரன், Dr. A.R. கணேசன், திரு. M.M. தனசேகரன், சிறப்பு அழைப்பாளர்கள் திரு. E.S. ரமேஷ் பாபு, திரு. K.K. சங்கர், திரு. M.R. முரளி, திரு. A.S.V. கணேஷ், திரு. B.V. குப்புராஜ், திரு. N.A.S. முத்துகுமாரசாமி, திரு. J. சுரேஷ் திரு. P.S. ரத்னகுமார், திரு. K.V. பாலாஜி ஆகியோருக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. அனைவரையும் ஒருங்கிணைப்பு செய்த பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி அவர்களை சேம்பர் பாராட்டுகிறது.

# 18TH ANNIVERSARY - PHOTO GALLERY


LIGHTNING


BHARATHANATIYAM


MEMBERS GATHERING


SECRETARY REPORT


SPONSOR TO STUDENTS


FELICITATION


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. K.V. BALA


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. C.K. SEKAR


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. E.R. KUMARESAN


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. K.K.G. PRABHAKARAN


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. S.K.R. RAMESH


CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. M.K. KALADHAR BABU



CHARTER DAY CELEBRATION
HONOR TO PP SRI. KUMARAN B JAGHUVA


CHARTER DAY CELEBRATION
HONOR TO IPP SRI. T.R. MOHANRAM


SPEECH BY CHIEF GUEST


SPEECH BY GUEST OF HONOR


LUCKY DRAW


ABOUT CHAPTER


ANNOUNCEMENT & VOTE OF THANKS

# 75[வது] குடியரசு தின நிறைவு விழா கொண்டாட்டம்



பாரதத்தின் 76வது குடியரசு தின விழாவை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் 75வது குடியரசு தின நிறைவு விழாவாக 26.01.2025 அன்று கொண்டாடியது. காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள் பலர் திரளாக கலந்து கொண்டு அனைவரும் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தினர். தேசிய கீதம் பாடப்பட்டபின் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதனையடுத்து, குடியரசு தின சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சி சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தமிழ்நாட்டின் நகைக்கடைகளின் அடையாளமாகத் திகழும் தங்க மயில் ஜுவல்லரி இயக்குநரும், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் துணைத் தலைவருமான திரு. **பா. ரமேஷ்** அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் லாப் ஸமாச்சார் குழுவினர் மற்றும் நிர்வாகிகள் 20.01.2025 அன்று நேரில் சந்தித்து ஜனவரி மாத லாப் ஸமாச்சார் இதழை அவரது கரங்களால் வெளியீடு செய்தனர். இந்த நிகழ்வில், சேம்பர் செயல்பாடுகள் மற்றும் சமூக தொழில் குறித்துப் பேசினர். மேலும் நம் சமூகத்தின் பெருமைகள் பற்றியும் பேசினார். இந்த சந்திப்பில், அவர் நமக்களித்த வரவேற்பும், நமக்கும் அவருக்குமான உரையாடலும் மிகவும் அருமையான தருணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.



A.N.R. ஸ்ரீதரன்

குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மதுரை, தெப்பக்குளம் காவல் ஆய்வாளர் உயர்திரு. ஏ.என்.ஆர். ஸ்ரீதரன் அவர்கள் சட்ட விதி முறைகளை பின்பற்றுவதன் அவசியம் குறித்துப் பேசினார். நம் சமூக மக்களின் பிரச்சனைகள் ஏதுவாயின் தம் சரகத்திற்கு உட்பட்டதென்றால் தம்மால் ஆன உதவியை செய்வதாகத் தெரிவித்தார். ஸௌ. சேம்பர் அவருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது.



S.K.R. ரமேஷ்

சேம்பர் முன்னாள் தலைவரும், ஸௌ. சமூக நலப்பேரவையின் தலைவருமான திரு. எஸ்.கே.ஆர். ரமேஷ் அவர்கள் பேசுகையில், சுய தொழில் ஈடுபாடு மட்டும் அல்லாது அரசுப் போட்டித் தேர்வுகளிலும் நம் சமூக மாணவர்கள் பெருமளவு பங்கேற்று அரசுப் பணிகளில் சேர வேண்டும். இது நம் சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மிகவும் உதவிகயாக இருக்கும் என்று தெரிவித்தார். ஸௌ. சேம்பர் அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தது.



### கையில் பணம் இருந்தால் பணக்காரன் அல்ல; கணக்கில் பணம் இருந்தால் தான் பணக்காரன்

# யூனியன் பட்ஜெட் 2025 - விளக்கக் கூட்டம்







பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டம் மத்திய பட்ஜெட் 2025 சம்பந்தமாக நடத்தப்பட்டது. 06.02.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர்-மேபிளவர் அரங்கில் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக, BSL and Associates, LLP பட்டயணக்கணக்காளர்கள் திரு. J. பாலசுப்பிரமணியன் அவர்களும் திரு. G. சரவணக்குமார் அவர்களும் கலந்து கொண்டு பட்ஜெட் 2025 குறித்து விளக்கமளித்தனர்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் இந்த கூட்டத்தின் நோக்கம் குறித்துப் பேசினார். நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு.S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த கூட்டத்தை நடத்திச்சென்றார்.

திரு. J. பாலசுப்பிரமணியன் அவர்களை சிறப்பு அழைப்பாளர் திரு. லகுடுவா பாஸ்கர் அவர்களும், திரு. G. சரவணக்குமார் அவர்களை சிறப்பு அழைப்பாளர் திரு. L.B. அசோக் குமார் அவர்களும் அறிமுகப்படுத்தினர்.

மறைமுக வரி சம்பந்தமாக திரு. J. பாலசுப்பிரமணியன் அவர்கள் விளக்கிப் பேசினார். நேரடி வரி சம்பந்தமாக திரு. G. சரவணக்குமார் அவர்கள் விளக்கிப்பேசினார்.

கையில் பணம் இருந்தால் பணக்காரன் அல்ல, கணக்கில் பணம் இருந்தால் தான் பணக்காரன் என்பது போல நமது மத்திய அரசு பட்ஜெட்-ஐ தயாரித்துள்ளது. இதனை உணர்ந்து நாம் நடந்து கொள்ள வேண்டும் என்ற நிறைவான கருத்தினை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்து சிறப்பு விருந்தினர்கள் தங்களது உரையை நிறைவு செய்தனர்.

அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கமும் அளித்தனர். இருவரும் சேம்பர் சார்பாக நினைவுப்பரிசு வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்த 2025 பட்ஜெட் ஒரு வரலாறு காணாத பட்ஜெட். இந்திய மக்கள் அனைவரும் திரும்பி பார்க்க வைத்த பட்ஜெட். நடுத்தர மக்களுக்கு மிக மிக பயனுள்ள பட்ஜெட் என்று அனைவராலும் கூறப்படுகிறது.

இணைச் செயலாளர் திரு. S.G. ஸ்ரீநிவாசன் அவர்கள், அடுத்தமாத நிகழ்ச்சியாக, மகளிர் தினத்தை முன்னிட்டு அவர்களை சார்ந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு விருந்து வழங்கப்பட்டது. இந்த விருந்தோம்பல் ஏற்பாடு செய்த பிப்ரவரி மாத பிறந்தநாள் கொண்டாடும் சேம்பர் குழுவினர் திரு. N.N. ஹரிராம், திரு. S.M. கார்த்தி குமரன், திரு. L.N.R. தாமோதரன், Dr. T.M. பிரசன்ன குமார், திரு. N.A.S. முத்து குமார சாமி, திரு. T.K. யாகேஸ்வரன், திரு. A.S.V. கணேஷ், திரு. K.V. பாலாஜி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.




# மத்திய பட்ஜெட் 2025 சிறப்பம்சங்கள்

- சராசரி மாத வருவாய ரூ. 1 லட்சம் வருமான வரி இல்லை. இதனால் நடுத்தர வகுப்பினரின் வீட்டு சேமிப்பு மற்றும் நுகர்வை அதிகரிக்கும்.
- புதிய வரித் தொகுப்பில் மாத ஊதியம் பெறும் பிரிவினர் ஆண்டுக்கு ரூ. 12.75 லட்சம் வரை வருமான வரி செலுத்த வேண்டியதில்லை.
- வளர்ச்சியின் 4 எஞ்சின்களை மத்திய பட்ஜெட் அங்கீகரிக்கிறது. 1. வேளாண்மை, 2. எம்.எஸ்.எம்.இ., 3. முதலீடு 4. ஏற்றுமதி.
- குறைந்த அளவு வேளாண் உற்பத்தித் திறன் உள்ள 100 மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதமரின் தன்-தானிய வேளாண் திட்டத்தில் 1.7 கோடி விவசாயிகள் பயனடைவார்கள்.
- துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மைசூர் பருப்பு ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தும் பருப்பு வகைகளில் தற்சார்புக்கான இயக்கம் தொடங்கப்படும்.
- திருத்தியமைக்கப்பட்ட வட்டி மானிய திட்டத்தின்கீழ் கிசான் கடன் அட்டை மூலம் ரூ. 5 லட்சம் வரை கடன் வழங்கப்படும்.
- நிதிப் பற்றாக்குறையை 4.8 சதவீதம் என்பதுடன் நிறைவு செய்ய நிதியாண்டு 2025 மதிப்பிட்டுள்ளது. நிதியாண்டு 2026ல் இதனை 4.4 சதவீதத்திற்கு கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- எம்.எஸ்.எம்.இ.,களுக்கு உத்தரவாதத்துடனான கடன் ரூ. 5 கோடி முதல் ரூ. 10 கோடி வரை கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் தயாரியுங்கள் (மேக் இன் இந்தியா) திட்டத்தை மேலும் விரிவாக்க சிறு, குறு, நடுத்தர, பெருந்தொழில்களையும் உள்ளடக்கிய தேசிய உற்பத்தி இயக்கம் தொடங்கப்படும்.
- அடுத்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளில் 50000 அடல் டிங்கரிங் சோதனைக் கூடங்கள் அமைக்கப்படும்.
- மொத்தம் ரூ. 500 கோடி முதலீட்டுடன் கல்விக்கான செயற்கை நுண்ணறிவு சிறப்பு மையம்.
- வங்கிகள் மூலம் பிரதமரின் ஸ்வநிதி விரிவாக்கம், ரூ. 30000 வரம்புடன் யுபிஐ-யுடன் இணைக்கப்பட்ட கடன் அட்டைகள்
- கிக் பணியாளர்கள் அடையாள அட்டை பெறுவார்கள். இ-ஷ்ரம் போர்ட்டலில் பதிவு செய்து கொள்ளலாம். பிரதமரின் மக்கள் ஆரோக்கி திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறலாம்.
- வளர்ச்சி மையங்களாக நகரங்கள் என்ற திட்டத்திற்கு ரூ. 1 லட்சம் கோடியில் நகர்ப்புற சவால் நிதியம் அமைக்கப்படவுள்ளது.
- தனியார் துறை மூலமான ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்பு முயற்சிகளுக்கு ரூ. 20000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- காப்பீட்டுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு வரம்பு 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிப்பு
- பல்வேறு சட்டங்களில் உள்ள 100க்கும் அதிகமான பிரிவுகளை குற்றமற்றதாக மாற்றுவதற்கு மக்கள் விஸ்வாச மசோதா 2.0 அறிமுகம் செய்யப்படும்.
- புதுப்பிக்கப்பட்ட வருமான வரிக் கணக்கு தாக்கலுக்கான காலவரம்பு 2 ஆண்டுகளில் இருந்து 4 ஆண்டுகளாக அதிகரிப்பு
- வருவாயில் வரி பிடித்தம் செய்து செலுத்துவதில் கால தாமதம் குற்றமற்றதாக மாற்றப்பட்டுள்ளது.
- வாடகை வருவாயில் வரிப்பிடித்தம் ரூ. 2.4 லட்சத்திலிருந்து ரூ. 6 லட்சமாக அதிகரிப்பு.
- புற்றுநோய், அரிய மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான 36 உயர்காக்கும் மருந்துகள், மருந்துப் பொருட்களுக்கு அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஐஎஃப்பிடி-க்கான (தட்டையான காட்சித் திரை) அடிப்படை சுங்கத்தீர்வை 5 சதவீதமாக குறைப்பு.
- உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க ஓபன் செல் பகுதிகள் மீதான அடிப்படை சுங்கத்தீர்வை விலக்கு.
- மின்கல உற்பத்தி, மின்சார வாகனங்களுக்கு கூடுதலான மூலதனப் பொருட்கள், செல்பேசிகளுக்கான பேட்டரி தயாரிப்பு ஆகியவற்றை அதிகரிக்க விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- கப்பல் கட்டுமானத்திற்கான கச்சாப்பொருட்கள் மற்றும் சாதனங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு அடிப்படை சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கு.
- குளிர்ப்பதனம் செய்யப்பட்ட மீன்பசை மீதான அடிப்படை சுங்கத்தீர்வை 30 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும், பதப்படுத்தப்பட்ட மீன் மீதான அடிப்படை சுங்கத் தீர்வை 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.


**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# 2025 யூனியன் பட்ஜெட்டில்

## குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கான முக்கிய நடவடிக்கைகள்

யூனியன் பட்ஜெட் 2025-26 கடன் அணுகளை மேம்படுத்துதல், முதல்முறை தொழில்முனைவோரை ஆதரித்தல் மற்றும் தொழிலாளர் தீவிர தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் எம்எஸ்எம்இ துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொடர் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துகிறது.

**திருத்தப்பட்ட வகைப்பாடு அளவுகோல்கள்**

எம்எஸ்எம்இ-களின் செயல்பாடுகளை அளவிடுவதற்கும், சிறந்த வளங்களை அணுகுவதற்கும், வகைப்படுத்தலுக்கான முதலீடு மற்றும் வருவாய் வரம்புகள் முறையே 2.5 மடங்கு மற்றும் 2 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. இது செயல்திறனை மேம்படுத்தும், தொழில்நுட்ப தத்தெடுப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| Rs. in Crore | Investment | | Turnover | |
|---|---|---|---|---|
| | Current | Revised | Current | Revised |
| Micro Enterprises | 1 | 2.5 | 5 | 10 |
| Small Enterprises | 10 | 25 | 50 | 100 |
| Medium Enterprises | 50 | 125 | 250 | 500 |

**மேம்படுத்தப்பட்ட கடன் கிடைக்கும் தன்மை**

★ குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் தொகை ரூ. 5 கோடியில் இருந்து ரூ. 10 கோடியாக உயர்த்தப்பட்டு, ஐந்தாண்டுகளில் ரூ. 1.5 லட்சம் கோடி கூடுதல் கடன் கிடைக்கும்.

★ 27 முன்னுரிமைத் துறைகளில் கடனுக்கான கட்டணத்தில் 1% குறைக்கப்பட்டதன் மூலம் ஸ்டார்ட்அப்கள் அவற்றின் உத்தரவாதத் தொகையை ரூ. 10 கோடியில் இருந்து ரூ. 20 கோடியாக இரட்டிப்பாக்கும்.

★ ஏற்றுமதியாளர் எம்எஸ்எம்இ-கள் மேம்படுத்தப்பட்ட உத்தரவாதக் கவருடன் ரூ. 20 கோடி வரையிலான காலக் கடன்களால் பயனடையும்.

**குறு நிறுவனங்களுக்கான கடன் அட்டைகள்**

★ புதிய தனிப்பயனாக்கப்பட்ட கிரெடிட் கார்டு திட்டம், உத்யம் தளத்தில் பதிவுசெய்யப்பட்ட குறு நிறுவனங்களுக்கு ரூ. 5 லட்சம் கடன் வழங்கப்படும். முதல் ஆண்டில் 10 லட்சம் கார்டுகள் வழங்கப்பட உள்ளன.

★ ஸ்டார்ட்அப்களுக்கான ஆதரவை விரிவுபடுத்துவதற்காக ரூ. 10000 கோடியுடன் புதிய ஃபண்ட் ஆப் ஃபண்ட் நிறுவப்படும்.

★ 5 லட்சம் முதல் முறையாக பெண்கள், பட்டியலிடப்பட்ட சாதி மற்றும் பழங்குடி தொழில்முனைவோருக்கான திட்டம், ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டத்தின் படிப்பினைகளை உள்ளடக்கிய ஐந்து ஆண்டுகளில் ரூ. 2 கோடி வரை காலக்கடனை வழங்கும்.

**உற்பத்தி மற்றும் சுத்தமான தொழில்நுட்ப முயற்சிகள்**

★ மேக்-இன் இந்தியா திட்டத்தின் கீழ் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கொள்கை ஆதரவு மற்றும் சாலை வரைபடங்களை தேசிய உற்பத்தித் திட்டம் வழங்கும்.

★ சுத்தமான தொழில்நுட்ப உற்பத்தி, சோலார் பிவி செல்கள், இவி பேட்டரிகள், காற்றாலை விசையாழிகள் மற்றும் உயர் மின்னழுத்த பரிமாற்ற கருவிகளின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதில் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.






# தமிழ்நாட்டில் புதிதாக ஜி.எஸ்.டி. பதிவு பெற பயோமெட்ரிக் ஆதார் நடைமுறை

புதிதாக ஜிஎஸ்டி பெற விரும்புபவர்கள் பயோமெட்ரிக் அடிப்படையிலான ஆதார் அங்கீகார முறையை மத்திய அரசு தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த நடைமுறை தமிழ்நாடு மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த 28.01.2025 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

CGST விதிகள், 2017ன் விதி 8ன் துணை விதி 4ஏ-ன் விதிமுறைப்படி பயோமெட்ரிக் ஆதார் அங்கீகாரம், விண்ணப்பதாரரின் புகைப்படம் எடுத்தல் மற்றும் பதிவுக்கான சில வகை விண்ணப்பங்களுக்கான ஆவணங்களை சரிபார்ப்பதற்கு பரிந்துரைக்கிறது. இது சம்பந்தமாக தமிழ்நாடு மாநிலம் முழுவதும் ஜிஎஸ்டி சுவிதா மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தங்கள் அதிகார வரம்பிற்குபட்ட ஜிஎஸ்டி சுவிதா மையத்தின் இருப்பிடத்தை வர்த்தகம் அறிந்து கொள்ள வசதியாக வர்த்தக அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அதன்படி மதுரையிலும் ஜிஎஸ்டி சுவிதா மையங்கள் செயல்படும். இது சென்னை மண்டலத்தின் சிஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் துறையின் முதன்மை தலைமை ஆணையரின் ஒப்புதலுடன் தொடர்புடையது.

ஜி.எஸ்.டி பதிவுக்கான விண்ணப்ப செயல்முறையை காண்போம். பின்வரும் முக்கிய விஷயங்களை மனதில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- பயோமெட்ரிக் அடிப்படையிலான ஆதார் அங்கீகாரத்திற்கான தரவு பகுப்பாய்வு மற்றும் ஆபத்து அளவுருக்கள் அடிப்படையில், விண்ணப்பதாரர் பொதுவான போர்ட்டலில் அடையாளம் காணவும், விண்ணப்பத்துடன் பதிவுபெறப்பட்ட ஆவணங்களின் அசல் நகலின் சரிபார்ப்புடன் விண்ணப்பதாரரின் புகைப்படத்தை எடுக்கவும் அனுமதிக்கும் வகையில் CGST 2017ன் விதி 8 திருத்தப்பட்டுள்ளது.
- கூறப்பட்ட செயல்பாடு, ஆவண சரிபார்ப்பு மற்றும் சந்திப்பு முன்பதிவு செயல்முறைக்கும் வழங்குகிறது. படிவம் GST REG-01 ல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு, விண்ணப்பதாரர் பின்வரும் இணைப்புகளில் ஏதேனும் ஒன்றை மின்னஞ்சலில் பெறுவார்.
  - (அ). OTP அடிப்படையிலான ஆதார் அங்கீகாரத்திற்கான இணைப்பு அல்லது
  - (ஆ). பயோமெட்ரிக் அடிப்படையிலான ஆதார் அங்கீகாரம் மற்றும் ஆவணச் சரிபார்ப்புக்காக அதிகார வரம்பின் விவரங்களுடன் **ஜிஎஸ்டி சுவிதா கேந்திராவை (GSK)** பார்வையிடுவதற்கான செய்தியுடன் சந்திப்பை முன்பதிவு செய்வதற்கான இணைப்பு,
- விண்ணப்பதாரர் குறிப்பு (அ)வில் குறிப்பிட்டுள்ளபடி OTP அடிப்படையிலான ஆதார் அங்கீகாரத்திற்கான இணைப்பைப் பெற்றால், அவர், ஏற்கனவே உள்ள செயல்முறையின்படி விண்ணப்பத்தைத் தொடரலாம்.
- இருப்பினும், குறிப்பு (ஆ)வில் குறிப்பிட்டுள்ளபடி இணைப்பை விண்ணப்பதாரர் பெற்றால், மின்னஞ்சலில் வழங்கப்பட்ட இணைப்பைப் பயன்படுத்தி, நிணுமிக்கப்பட்ட GSK மையத்தைப் பார்வையிடுவதற்கான சந்திப்பை அவர் முன்பதிவு செய்ய வேண்டும்
- நிணுமிக்கப்பட்ட GSK மையத்தைப் பார்வையிட ஒரு சந்திப்பை முன்பதிவு செய்யும் அம்சம் இப்போது தமிழ்நாடு மற்றும் இமாச்சலப் பிரதேச விண்ணப்பதாரர்களுக்குக் கிடைக்கிறது.
- சந்திப்பை முன்பதிவு செய்த பிறகு, விண்ணப்பதாரர் மின்னஞ்சல் மூலம் (சந்திப்பு உறுதிப்படுத்தல் மின்னஞ்சல்) நியமன உறுதிப்படுத்தலைப் பெறுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டவணையின்படி நியமிக்கப்பட்ட ஜிஎஸ்கே மையத்தைப் பார்வையிட முடியும்.
- GSK மையத்திற்கு வருகையின் போது, விண்ணப்பதாரர் பின்வரும் விவரங்களை / ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.
  - சந்திப்பு உறுதிப்படுத்தலுக்கு மின்னஞ்சல் நகல்
  - தகவல் மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார வரம்பின் விவரங்கள்.
  - ஆதார் அட்டை மற்றும் பான் அட்டை – நகல்
  - தகவல் மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டபடி, விண்ணப்பத்துடன் பதிவேற்றப்பட்ட அசல் ஆவணங்கள்.
- ஜிஎஸ்டி விண்ணப்பப் படிவும் REG-01 ன் படி, தேவையான அனைத்து தனிநபர்களுக்கும் பயோமெட்ரிக் அங்கீகாரம் மற்றும் ஆவண சரிபார்ப்பு GSK மையத்தில் செய்யப்படும்.
- விண்ணப்பதாரர், தகவல் மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளபடி, விண்ணப்பத்திற்கான அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட கால கட்டத்தில் பயோமெட்ரிக் சரிபார்ப்புக்கான சந்திப்பைத் தேர்வு செய்ய வேண்டும்.


இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பயோமெட்ரிக் அடிப்படையிலான ஆதார் அங்கீகார செயல்முறை மற்றும் ஆவண சரிபார்ப்பு முடிந்ததும் ARN-கள் உருவாக்கப்படும்.

இந்த மையத்தின் செயல்பாட்டு நாட்கள் மற்றும் நேரங்கள் உங்கள் மாநிலத்தில் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி இருக்கும் என்று GSTN குழு தெரிவித்துள்ளது.




இட்காட் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. **சோமி. நாகேஸ்வரன்** அவர்களின் முயற்சியில், நமது ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் மத்திய கல்வித்துறை அமைச்சகத்திற்கு ஸௌராஷ்ட்ர மொழி மற்றும் கலாச்சார மையம் அமைத்திடக் கோரி கடிதங்களை அனுப்பியிருந்தது. இதனை பரிந்துறை செய்யக்கோரி, நாகாலாந்து கவர்னர் திரு. **இல. கணேசன்** அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தனர். இதில், ஸௌராஷ்ட்ர சமூகத்தின் முக்கிய அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பின்போது, ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக கலந்து கொண்ட முன்னாள் தலைவர் திரு. **எஸ்.கே.ஆர். ரமேஷ்** அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களின் மன்–கீ–பாத் நிகழ்ச்சியில் நாகாலாந்து ஸ்டார்ட்அப் தொழில் வளர்ச்சி பற்றி பெருமையாக பேசியிருந்ததை கருத்தில் கொண்டு, நமது தமிழ்நாட்டிலும், இந்த முன்னேற்றம் பெற தொழில் வாய்ப்பு அளிக்க ஸௌ. சேம்பர் சார்பாக கோரிக்கை மனு அளித்தார்.





ஓம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசாய நமஹ:

# ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் கௌன்சில்

**2025-2028 ஆம் ஆண்டுகளுக்கான**

**நிர்வாகக்குழு தேர்தல்**

## Dr.T.N.K.அணிக்கே வாக்களிப்பீர்!





**அனைத்து சமூக அமைப்புகள் முழு ஆதரவு பெற்ற வெற்றி வேட்பாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| **3** |  | SRB 92445 00633<br>(செட்டி) **Er.S.S.கிஷோரிலால்** B.E.,<br>S/o.Sri.S.R.B.K.சுந்தரராமன் (பாபு)<br>(பொருளாளர்-சௌராஷ்ட்ர சமூக நலப்பேரவை) | X |
| **4** |  | 98945 16546<br>(திம்மக்கொண்டு) **Dr.T.N.குப்புசாமி** M.B.B.S.,DMR.,DMRT,(London)<br>S/o.Sri.T.K.நரசிம்மன்<br>(நிறுவனர்-மதுரை சாரிடபிள் டிரஸ்ட் & ஆகாஷ் முதியோர் இல்லம்) | X |
| **7** |  | 94430 34009<br>(செட்டி) **S.R.சுதர்ஸன்** M.B.A.,<br>(Deputy Collector (Retd.) (சௌராஷ்ட்ர டிவி)<br>S/o.Sri.S.M.ராமகிருஷ்ணன்<br>(டைரக்டர்-ஸ்ரீநிவாசப்பெருமாள் கோவில், மதுரை-9) | X |
| **8** |  | 97896 34202<br>(அனந்து) **A.B.சுரேஷ் (எ) சூரி** B.Sc.,<br>S/o. Sri.A.N.பாலசுப்பிரமணியன் (சுபா ஆர்ட்ஸ்)<br>(Prop:சூர்யா கிராஃபிக்) (Spl.Invitee : சௌராஷ்ட்ர சேம்பர் ஆஃப் காமர்ஸ்) | X |
| **9** |  | 98421 88421<br>(வைத்தியம்) **Ln.V.V.சுரேஷ்** B.A.,RBV.,<br>S/o.Sri.V.G.வெங்கடாஜலபதி<br>(மீடியா கன்சலட்ன்ட் & பொது செயலாளர்,தமிழ்நாடு மஹா ஸௌராஷ்ட்ர ஸபா) | X |
| **10** |  | 94434 00857<br>(மூலா) **Er.M.M.தனசேகரன்**<br>B.E.,M.B.A.,M.Sc.,(C&P),M.Sc.,(REV)<br>S/o.Sri.M.V.T.மோஹன்ராம்<br>(EC-சௌராஷ்ட்ர சேம்பர் ஆஃப் காமர்ஸ்) (மூத்த கட்டிட பொறியாளர் & மனநல ஆலோசகர்) | X |
| **12** |  | 98430 53044<br>(முசுவாதி) **K.K.தினேஷ்** B.B.A.,M.Com.,RBP.,<br>S/o.Sri.M.R.S.கிருஷ்ணமூர்த்தி<br>(தலைவர், சௌராஷ்ட்ர சேம்பர் ஆஃப் காமர்ஸ்) | X |
| **14** |  | 94426 03120<br>(குப்பல்) **K.R.பாஸ்கர்** M.A., M.B.A., M.Phil.,<br>S/o. Sri. K.S.ராமகிருஷ்ணன் (Ex.Chairman, MLA, M.C.)<br>Educational Media Research Centre (Retd.) M.K.University | X |

**தேர்தல் வாக்குறுதிகள்:**

1) தகுதியுள்ள சௌராஷ்ட்ர சமூகத்தினர் அனைவரும் கௌன்சில் உறுப்பினராக சேர்க்கப்படுவார்கள். தனி **"Website"** உருவாக்கப்பட்டு **"ID Card"** வழங்கப்படும்.
2) "பள்ளி" நமது ஸமூக மக்களுக்கு பாத்தியப்பட்டது. பள்ளி வேலை வாய்ப்புகளில் நம் சமூக மக்களுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்படும்.
3) கௌன்சிலுக்கு வரும் வாடகை வருமானங்களை கொண்டு மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் மற்ற முழு பாரமரிப்புகளையும் செய்து பள்ளி வளாகத்தை சிறந்த முறையில் மாற்றுவோம்.
4) நிர்வாக குழுவை வழி நடத்துதல் & மாணவர்களுக்கு கல்வி & வேலை வாய்ப்புக்குரிய வழிகாட்ட உரிய ஆலோசனை குழு ஏற்படுத்தப்படும்.
5) **A.K.R.** குடும்ப சொத்தாக மாற்றப்பட்ட கௌன்சில் சொத்துகளை உடனடியாக மீட்போம்.
6) ஆசிரியர்களை பள்ளி பணிகளில் மட்டும் ஈடுபடுத்தி மாணவர்களின் தனித்திறமைகளை சிறப்படைய செய்வோம்.
7) மாணவர்களிடையே ஒழுக்கத்தினை வளர்ப்போம்! தீய பழக்கத்தை கைவிடச் செய்வோம்.
8) இழந்துவிட்ட நமது 2 கல்வி நிறுவனங்களை மீட்டு மீண்டும் ஐம்பெரும் பள்ளிகளாக மாற்றுவோம். பழைய பெருமைகளை மீட்போம்.
9) வசதி குறைவான சௌராஷ்ட்ர மாணவ/ மாணவிகள் **CBSE** கல்வி கிடைக்க புதிய **CBSE** பள்ளி நிறுவப்படும்.
10) நிர்வாகத்தில் குடும்ப வாரிசுகளால் மட்டுமே நிரப்பபடுவதை தடுப்போம்.

**இவண் :**
**Dr.TNK அணி தேர்தல் பணிக்குழு**

**தேர்தல் நாள்: 23-2-2025 ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: ஸௌராஷ்ட்ர மேல்நிலைப்பள்ளி, மதுரை-9.**
நேரம்:காலை 8 மணி முதல் 12 மணி வரை - பகல் 1 மணி முதல் 5 மணி வரை

உங்கள் பொன்னான வாக்குகளை Dr.T.N.குப்புசாமி அவர்களின் அணி வேட்பாளர்கள் 8 பேருக்கு வாக்களித்து அமோக வெற்றி பெற செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டையுடன் வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*Advertisement

## இளைஞர்களின் மன
## ஆரோக்கியமும்; பொருளாதாரமும்

மன நலம் என்பது வாழ்க்கையின் சவால்களை எதிர்கொண்டு உற்பத்தி ரீதியாக செயல்படும் திறன் ஆகும். மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த 2024-25 பொருளாதார ஆய்வரிக்கையில் இது பற்றி கூறப்பட்டுள்ளது.

வாழ்க்கை முறை தேர்வுகள், பணியிட கலாச்சார மற்றும் குடும்ப சூழ்நிலைகள் உற்பத்தித்திறனுக்கு மிக முக்கியமானவை என்றும், இந்தியாவின் பொருளாதார லட்சியங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால், குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும் இது குறித்து உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே மனநலப் பிரச்சனைகள் அதிகரிப்பது பெரும்பாலும் இணையத்தின் அதிகப்படியான பயன்பாட்டுடன், குறிப்பாக சமூக ஊடகங்களுடன் தொடர்புடையது என்பதை பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

சிறந்த பணியிட காலச்சாரம் சிறந்த மன நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் எனவும், வாழ்க்கை முறை தேர்வுகள் மற்றும் குடும்ப சூழ்நிலைகளும் மன நல்வாழ்வில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன என்றும் அது கூறுகிறது.

அதிகமாக பதப்படுத்தப்பட்ட உணவை அரிதாகவே உட்கொள்பவர்கள், தொடர்ந்து உட்கொள்பவர்களை விட சிறந்த மன நல்வாழ்வைக் கொண்டுள்ளனர் என்று பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது. அரிதாக உடற்பயிற்சி செய்பவர்கள், சமூக ஊடகங்களில் தங்கள் ஓய்வு நேரத்தை செலவிடுபவர்கள் அல்லது தங்கள் குடும்பங்களுடன் நெருக்கமாக இல்லாதவர்கள் மோசமான மன நல்வாழ்வைக் கொண்டுள்ளனர் என்று அது கூறுகிறது.


APPOLO SALES & SERVICE
அப்போலோ
மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்

கம்பரசர் மோட்டார் ரூ 12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்



**Available for Lease Rent**

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090



நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
**SRB SILKS HOUSE**
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

**SRB FINSERVE PVT.LTD.**
B1, Sivagangai Road, Managiri,K.K.Nagar,Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

**SRB RETAIL LLC.**
503, Gracelyn Way Lewis Center, COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

**SRB MULTI PURPOSE HALL**
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar,Madurai.
Cell : 89039 29247

SRB 100 YEARS

**EXPRESS BRIYANI**
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

**KEESHTU BOLI & SNACKS**
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

**SRB CATERING**
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

**SWASI NATURO CURE HOSPITAL**
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*



K.K.Dinakaran
Chairman & Director

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for

Godrej – Chemical Division


IFF – Perfumes & Fragranaces

INDORAMA – Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products

Micro Sol – Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products










Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**


**Branches** | **Chennai** | **Madurai** | **Hyderabad** | **Bangalore**

# நம் இளைஞர்கள் அதிகம் அறிந்துகொள்ள வேண்டிய சமூகத் தலைவர்

## ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் B.A., B.L.,





ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யும் நிகழ்வு

ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் 155வது ஜெயந்தி விழா கடந்த 14.01.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக, அவ்ராம் அமி டிரஸ்ட் தலைவர் திரு. கன்னிவாடி கே. தேவராஜ் அவர்கள் கலந்து கொண்டார். உடன் அவ்ராம் அமி டிரஸ்ட் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் குடும்ப வாரிசுகளான ஸ்ரீ. எல்.எம். ஜானகிராம் M.A., Deputy Collector (Retd.) ஸ்ரீ. எல்.எம்.டி. சிவக்குமார், தொழிலதிபர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவின் துவக்கத்தில், சேம்பர் நிர்வாகிகள், உறுப்பினர்கள், அவ்ராம் அமி டிரஸ்ட் நிர்வாகிகள் பலர் ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள், நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசியதுடன், அவரது பெருமைகளையும் நினைவுகூர்ந்தார்.




கன்னிவாடி. கே. தேவராஜ்

பின்னர் பேசிய, சிறப்பு விருந்தினர் திரு. கன்னிவாடி. கே. தேவராஜ் அவர்கள், ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்கள் நமது சமூக முன்னேற்றத்திற்கும், பிற சமுதாய நலனுக்கும், மதுரை மாநகர வளர்ச்சிக்கும் அவரது அளப்பரிய பங்களிப்புப் பற்றிப் பேசினார். அவரது பெருமைகள் நம் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டியது நமது கடமை என்றார்.



எல்.எம். ஜானகிராம்

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ராஷ்ட்ரபந்து எல்.கே.துளசிராம் அவர்களின் குடும்ப வாரிசான ஸ்ரீ. எல்.எம். ஜானகிராம் அவர்கள் பேசுகையில், நமது அடுத்தத் தலைமுறைனர்களிடையே அவரது பெருமைகளை கொண்டு சேர்க்க அவரின் பல்வேறு சாதனைகளைப் பற்றி நினைவு கூற நம் சமூக கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகளை நடத்தக் கேட்டுக்கொண்டார். மேலும், வெற்றி பெருபவர்களுக்கு பரிசுத் தொகையை அளிக்க தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த போட்டியை அவ்ராம் அமி டிரஸ்ட் மற்றும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பொறுப்பில் நடத்தக் கேட்டுக்கொண்டார்.




ஏ.ஆர். அரங்கராமன்

பிறகு பேசிய, ஸௌராஷ்ட்ர ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. ஏ.ஆர். அரங்கராமன் அவர்கள், நமது ஸௌராஷ்ட்ர ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் கட்டிடக் கலை நுணுக்கத்தில் ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் பங்களிப்புப் பற்றிப் பேசினார். அதில், பல்வேறு ஆச்சரியமான, சுவாரசியமான, நம் சமூக மக்கள் பலரும் அறியாத பல்வேறு தகவல்களை அளித்தது கலந்த கொண்டவர்களின் கவனத்தை ஈர்த்தது. **பிறர்க்கு வாழ்** என்கிற வாசகம் நம் பள்ளியைத் தவிர வேறு எங்கும் காண முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அவரைத் தொடர்ந்து, விழாவில் கலந்து கொண்ட பலர் ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் பெருமைகளை நினைவுகூர்ந்தனர்.

விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினருக்கும், அவரது அமைப்பின் நிர்வாகிகளுக்கும், ஸ்ரீமான் எல்.கே.துளசிராம் அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கும் மரியாதை செய்யப்பட்டது.

சேம்பர் இணைச் செயலாளர் திரு. டி.என். சூரியபிரகாஷ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




# ஸௌராஷ்ட்ர உயர்நிலைப்பள்ளி நிலைமை

## ஓர் அலசல்

*– வீரஜா*




நம் சமூகத்தின் மணிமகுடம் மற்றும் மதுரையின் பெருமைகளில் ஒன்றான நூற்றாண்டு கண்ட சௌராஷ்ட்ர ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் செயற்குழு உறுப்பினர்களின் தேர்தல் 23.02.2025 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் தொடங்கி சௌராஷ்ட்ர குலத்தின் பல முன்னணி தலைவர்கள் கல்வி சேவை ஆற்றி நம் சமூக மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்ற பொதுநல நோக்கோடு இந்த கல் கட்டடம், மாணவர்களுக்கு (ஸ்காலர்ஷிப் உதவியுடன்) பள்ளிக் கட்டணம் இல்லாமலேயே, மதிய உணவும் வழங்கி தன்னிகரற்று விளங்கியது.

பெருந்தலைவர் வழியாக, தமிழகத்திற்கே மதிய உணவு திட்டத்தை வழங்கிய சிறப்பு வாய்ந்தது நம் பள்ளி என்பது சௌராஷ்ட்ரர்கள் ஒவ்வொருவரும் பெருமிதம் கொள்ள வேண்டிய விஷயம்.

ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தற்போது மேல்நிலைப்பள்ளி என்று அடுத்தடுத்த சிகரங்களுக்கு சென்று கொண்டிருந்த இந்த ஈடில்லா பள்ளியின் இன்றைய நிலை என்ன?

ஒரு கட்டத்தில், நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்துக் கொண்டிருந்த இந்த கல்விச்சாலையின் எண்ணிக்கை இன்று வெறும் ஆயிரத்திற்குள் அடங்கிவிட்டது அவமானகரமானது. 10வது மற்றும் 12வது மாணவர்களின் தேர்ச்சி விகிதம், மாநகர மற்றும் மாநில சராசரியைவிட மிகக் குறைவு என்பது ஜீரணிக்கமுடியாத தகவல்.

தனியார் பள்ளிகளின் காளான் வளர்ச்சி, ஆங்கில மோகம், கல்வியில் புதிய பரிணாம வளர்ச்சி போன்றவை அரசாங்க உதவி பெறும் பள்ளிகளை பின்னடையச் செய்திருப்பது உண்மை. இருந்தாலும், இவ்வளவுக்குப் பிறகும் கோயில் மாநகரத்தில் சில அரசாங்க உதவிபெறும் பள்ளிகளின் நிர்வாகம் இன்னமும் தங்களின் தகுதிகளை கோபுர உச்சியில் தான் வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த சீர்மிகு அட்டவணையில், பேர்பெற்ற நம்பள்ளியின் பெயர் இடம் பெறாதது, நிர்வாகத்தின் கோளாறு என்றே நினைக்கத் தோன்றுகிறது.

எல்.கே.டி. அவர்களின் சிலையை நிறுவிய அதே முனைப்பில், அவரது சிந்தனைகளை தொடர்ந்து பின்பற்றத் தவறியதால் வந்ததுதான் இந்த இழிநிலை.

நிரந்தரத்தாய் சரஸ்வதி தேவியின் அருள்பெற்று "பிறர்க்குவாழ்" என்ற உன்னத கோட்பாடுடன் உருவான பள்ளிக்கு களங்கமாக, கல்வித்தந்தைகள் என்று பலர் தற்காலிகமாக உற்பத்தியாகி, தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் வாழத்தொடங்கியதால், பள்ளியின் தரம் இத்தகைய வீழ்ச்சி அடைந்திருக்கிறது. கல்வியின் வளர்ச்சியை விட, வாடகை வருமான வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டு செயல்பட்டது மன்னிக்க முடியாதது.

இதற்கு தீர்வு தான் என்ன?

காலத்திற்குத் தகுந்த மாற்றங்கள் செய்து, மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன், தொழில் மேதை சி.எஸ். ராமாச்சாரி, ஆத்மஞானி கே.எல்.என். ஜானகிராம், ஞானி ராமாச்சாரி மாதிரி கொடையுள்ளம் கொண்டோரின் துணையுடன், திருவாளர்கள் என்.கே. குப்பய்யன், டி.ஆர். கோகுல்தாஸ், போன்றோருடைய ஆற்றல்களை ஸ்வீகரித்து "செயல்பட"க்கூடிய செயற்குழு அமைந்து, கௌரவ ஆலோசனைக்குழு என்று நிறுவி அதில் நிபுணர்களை உறுப்பினராக இணைத்து அவர்களின் திட்டங்களை பெற்று, முக்கியமாக அவற்றை சிரமேற்கொண்டு நிறைவேற்ற முற்பட்டால், நம்பள்ளியின் பொற்காலம் மீண்டு, மீண்டும் மிளிரும் என்பது நிச்சயம்.

சமூக மக்களாகிய நாம் அனைவரும் இனி ஒரு விதி செய்வோம்! அதனை இந்த தேர்தலில் காண்பிப்போம்! எல்.கே.டி. வழி நிற்போம்!! சுயநலவாதிகளின் ஆதிக்கத்தை அழிப்போம்! கல்வித்தரத்தை உயர்த்துவோம்! ஆசிரியப் பணியின் புனிதத்தை பேணுவோம்! வெளிநாடு வாழ் மற்றும் முன்னாள் மாணவர்கள் அனைவரின் துணை நாடுவோம்! ஒருங்கிணைந்து ஆக்கப்பூர்வமாக செயல்படுவோம்! நிதிநிலைமையை மீட்போம்! சமூகத்தின் மானம் காப்போம்!!!

வாழ்க சௌராஷ்ட்ரம்.

*Advertisement







பெங்களூருவில் உள்ள பிரபல ஆன்மிக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு சென்ற ஜனவரி மாதம் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களுக்கு கிடைத்திருந்தது. இந்த சந்திப்பில், சேம்பர் தலைவர் அவர்கள், நமது ஸௌராஷ்ட்ர சமூக ஆழ்வாராக போற்றப்படும் ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் உருவ படமும், அவரின் பெருமைகள் கொண்ட புத்தகமும் வழங்கினார். மேலும் நம் சமூகத்தினரின் ஆன்மிக நெறிமுறைகள் பற்றியும் விளக்கினார். ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் தகவல்களை கவனத்துடன் கேட்டறிந்தார்.




உத்தரகாண்ட்-ல் நடைபெற்ற தேசிய அளவிலான 100மீ., நீச்சல் போட்டியில் 29.20 நொடியில் கடந்து இரண்டாவது இடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார், அண்ணா பல்கலை மாணவர் 19 வயது நிறைந்த நமது சமூக இளைஞர் திரு. யாதேஷ் பாபு (இடது). இவர் நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. வி.ஆர். ராம்நாத் அவர்களின் புதல்வன் ஆவார். (முதல் பரிசை வென்றவர் 29.12 நொடிகளில் கடந்துள்ளார். இருவருக்கும் இடையில் 0.08 மைக்ரோ நொடிகளே வித்தியாசம் என்பது குறிப்பிடத்தக்கது). இவரின் இந்த அசாத்திய சாதனையை ஸௌராஷ்ட்ர சேம்பர் பாராட்டுகிறது. அடுத்தடுத்த போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வெல்லவும் வாழ்த்துகிறது.

## மதுரை செய்திகள்



மதுரை மாநகராட்சியின் புதிய கமிஷனராக திருமதி. சித்ரா விஜயன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மதுரை மாநகராட்சியின் 71வது கமிஷனர் ஆவார். மேலும், 1971ல் மதுரை, மாநகராட்சியாக ஆன பிறகு நியமிக்கப்படும் முதல் பெண் கமிஷனர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பணி சிறக்க, மாநகர் வளர்ச்சி பெற ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இவரை வாழ்த்துகிறது.



மதுரையில் ஜனவரி 29 முதல் 31 வரை வரி செலுத்துவோருக்கான சிறப்பு நிகழ்ச்சி தமுக்கம் கன்வென்சன் சென்டர்-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி, வரி தொடர்பான அத்தியாவசியத் தகவல்களின் ஆதாரமாக அமைந்தது. வரி செலுத்துவோரின் குறைகளைத் தீர்ப்பதற்கான பிரத்யேக அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. வரி செலுத்துவோருக்கு அதிகாரம் அளிக்கவும், வரி இணக்கம் மற்றும் திட்டமிடல் குறித்து வழிகாட்டவும், தனிநபர், தகவலறிந்த நிதி முடிவுகளை எடுக்கவும் உதவிகரமாக இருந்தன. இந்த புதுமையான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த வருமான வரித்துறைக்கு நன்றி




• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Prop.: B.S. Rajan

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

Your Name is Your Life

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009

Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.

Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





**ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.**

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in


நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj® RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





**மீரா குஞ்ச் பாலிடிரேடர்**

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

**VIGNESH GRAPHICS**

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.02.2025 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2025 - 2027
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**

(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com

**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service

சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*







*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com